[1995 மார்ச் 29

முற்பகல் 11-05

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்படுகின்றன. மண்டகப்பட்டு நடுநிலைப் பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் சுற்றளவில் தொடக்கப் பள்ளிகள் ஐந்தும், நடுநிலைப் பள்ளிகள் மூன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும், மேல்நிலைப் பள்ளி ஒன்றும் அமைந்து இருக்கின்றன. இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் அளவில், போதுமான இட வசதியும், தளவாடங்களும், விளையாட்டு இட வசதியும் இல்லை என்று குறிப்புரையிலே தெரிவித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு மேல்மட்டக் குழு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

158—

பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்துதல்

*9962—**திரு. எஸ். அண்ணாமலை:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் வரும் பாலாற்றுக் குடிநீரைத் தொடர்ந்து பெற பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பாலாற்று படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1995 மார்ச் 29]

திரு. எஸ். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னார். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்குக் குடிதண்ணீருக்கும், சாலை வசதிக்கும், தெரு விளக்குகளுக்கும் தெலுங்கு-கங்கா திட்டத்தையும், வீராணம் திட்டத்தையும் சென்னை மாநகருக்குக் கொண்டு வந்து மக்களுடைய குறையைத் தீர்க்கின்ற--தண்ணீர்ப் பிரச்சினையையும்--தீர்க்கின்ற வகையில் திட்டங்களைத் தீட்டி வருகின்ற காலக் கட்டத்தில் ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வரும் பாலாறுகுடிநீரைத் தொடர்ந்து பெற பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பியிருக்கிற இந்த வினாவிற்கு, பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்த ஏதும் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால் அங்கே இருக்கிற ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முறையாகச் செயல்பட வேண்டிய அத்துணை நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த அவையிலேகூட இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக இந்தப் பிரச்சினை தாம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களால் எழுப்பப்பட்டு அன்றைக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆலந்தூர்-பல்லாவரம் திட்டத்தைப் பொறுத்தவரை, பாலாற்றினுடைய பழைய சீவரத்திலிருந்து குடிநீர் இரு தனிப்பட்ட இடங்களிலே பெறப்பட்டு வெங்குடியிலிருந்தும், அங்கிருந்து மூன்று இடங்களுக்கு இந்த நீர் ஏற்றப்படுகிறது. இந்த நீரேற்று நிலையங்களிலேயிருந்து வெளியேற்றப்படுகின்ற நீரானது, தேவிரியம்பாக்கம், கிருஷ்ணா நகர், அங்கே கிருஷ்ணா நகரிலேயிருந்து கடப்பேரி ஆகிய இடங்களுக்கு உந்தப்பட்டு, இந்த ஆறு இடங்களிலேயிருந்து தண்ணீர் சேகரிக்கப்படுகிறது. ஆகவே, இந்த ஆறு இடங்களிலேயும் ஜெனரேட்டர் வேண்டுமென்று சொன்னால் அது மிகுந்த செலவினத்தை உருவாக்கக் கூடும். ஆகவேதான் இன்றைக்கு இந்த ஜெனரேட்டர்களை வைக்க முடியாத ஒரு நிலை உருவாகியிருக்கிறது. அதைப் பராமரிக்கக் கூடிய சிரமமும் அரசுக்கு இருக்கிறது. இன்றைக்கு இந்த இரண்டு நீரேற்று நிலையங்களுக்கும்

இரண்டு இடங்களிலேயிருந்து ஆறு நீரேற்று நிலையங்களுக்கும் இரண்டு இடங்களிலேயிருந்து மின்சாரம் பெறப்படுகிறது. ஒரு துணை மின் நிலையத்திலே தடை ஏற்பட்டாலும்கூட அடுத்த துணை மின் நிலையத்தின் மூலமாக மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. இன்றைக்கு அந்த அடிப்படையில் இந்த ஆறு நீரேற்று நிலையங்களிலே கிருஷ்ணா நகரிலே மட்டும்தான் மாற்று வசதி இல்லாமல் இருக்கிறது. ஆக, அதற்கும் மாற்று வசதியைச் செய்து விட்டோம் என்று சொன்னால் இந்த ஆறு இடங்களிலே ஜெனரேட்டர் பொருத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே, கிருஷ்ணா நகர் நீரேற்று நிலையத்திற்கு மட்டும் மாற்று வசதியைப் பொருத்துகிற வகையில் மின்சாரம் பெறுவதற்காக இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே மின் வாரியத்திற்குப் பணம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பணி தமிழ்நாடு மின் வாரியத்தினால் தொடங்கப்பட்டுள்ளது. எனவே ஜெனரேட்டர் பொருத்தும் அவசியம் இல்லை; ஜெனரேட்டர் இல்லாமலேயே இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும்.

திரு. எஸ். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் விளக்கமாக அறிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே பழைய சீவரததிலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்றபோது அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் --மழை பெய்து தண்ணீர்ப் பிரச்சினையே இல்லை என்ற வகையில் தண்ணீர் கிடைக்கின்றபோது மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பல்லாவரம், ஆலந்தூர் நகரத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கின்ற நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு அந்தப் பகுதியில் இருக்கின்ற பிரச்சினையைப் பார்த்து, ஜெனரேட்டரைப் பொருத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னழுத்த காரணத்தினாலேதான், இன்றைக்கு அந்தக் கிருஷ்ணா நகரிலே ஒரு மாற்று ஏற்பாடு இல்லை என்ற சூழ்நிலையில் நான் ஏற்கனவே சொன்னேன். கிருஷ்ணா நகர்ப் பகுதிக்கு, மாற்று ஏற்பாடு செய்வதற்காகத்தான், ரூ. 2 இலட்சத்து 85

1995 மார்ச் 29]

ஆயிரம் மதிப்பீட்டிலே, மின் வாரியத்தினால் பணிகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்து, பிரச்சினைகள் எல்லாம் முழுவதுமாகக் களையப்படுகிற சாத்தியக்கூறுகள் இருக்கிற காரணத்தினால்தான், அப்பணிகளைத் தொடங்கி யிருக்கிறார்கள். அந்தப் பணிகள் முடிவடைந்த பிறகு, அங்கே நிச்சயமாகப் பிரச்சினைகள் இருக்காது. ஆகவே, அந்தப் பணிகள் முடிவடைந்து, முறையாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுவதற்கு அனைத்துப் பணிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதியிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

159—

கல்லூத்து அருந்ததியர் குடியிருப்புக்கு மின்வசதி அளித்தல்

*20663—**திரு எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூத்து அருந்ததியர் குடியிருப்புக்கு மின்விளக்கு வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில், அதற்கு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூத்து, அருந்ததியர் குடியிருப்புக்கு ஊராட்சி நிதியின் வாயிலாக தெரு விளக்குகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்தப் பகுதியிலே வாழ்கிற அருந்ததிய சமுதாயத்தினர், அந்தக் காலனி வீடுகளுக்கு மின்சார விளக்கு இல்லாமல், ஒரு சகோதரிகூட, அங்கே பாம்பு கடிக்கப்பட்டு இறந்து போனார்.